DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.367/2021**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பிச்சை |
| Father Name | : | கணபதி ஆசாரி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

( 1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது கல்லுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் இரும்பு பட்டறை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.2 கண்ணனை தெரியும். அ.சா.1 ரதிலட்சுமியை தெரியும். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

அ.சா.1 ன் கணவர் முத்தையா என்பவர் திடீரென உடல்நிலை குறைபாடால் இறந்துவிட்டார் என்றும், முத்தையாவின் தம்பிகளான கணேசன், செல்வம் மற்றும் குணசீலன் ஆகியோர்கள் முத்தையாவிற்கு சரியான வைத்தியம் பார்க்காமல் அவரை கொன்றுவிட்டீர்கள் என்று அடிக்கடி சண்டை போட்டு வந்தார்கள் என்றும், இந்நிலையில் 29.11.2020ம் தேதி காலை 08.00 மணியளவில் நான் பட்டறையை திறந்து வேலை செய்து கொண்டிருந்தேன் என்றும், அன்று காலை 10.30 மணியளவில் அய்யனார், எனது இரும்பு

பட்டறைக்கு பின்புறம் உட்கார்ந்து தண்ணி அடித்துகொண்டிருந்த போது, பாதி குடித்துவிட்டு தான் அருகில் வைத்திருந்த பாதி மதுவுடன் கூடிய பாட்டிலை காணவில்லை, பாட்டிலை எனக்கு தெரியாமல் எடுத்தது யார் என்று பொதுப்படையாக சப்தம் போட்டுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரிகள் மூவரும் நீ எங்களை தப்பாக நினைத்து சப்தம் போடுகிறாயா என்று அய்யனாரிடம் கேட்டார்கள் என்றும், அப்போது அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டு கணேசன் உருட்டு மூங்கில் கம்பை எடுத்து அய்யனாரின் முதுகு, இடுப்பின் வலது பக்கம், இடது பக்கம், இடுப்பிற்கு கீழேயும் அடித்தார் என்றும், செல்வம் அய்யனாரின் முன்பக்க கழுத்தை பிடித்து பின்னால் தள்ளிவிட்டார் என்றும், அப்போது அய்யனார் மட்டமல்லாக்கா கீழே விழுந்தவுடன் குணசீலன் காலால் அய்யனார் வயிற்றில் உதைத்தார் என்றும், அப்போது நானும், கண்ணன் என்பவரும் சேர்ந்து விலக்கிவிட்டோம் என்றும், அன்று மீண்டும் சாயங்காலம் அய்யனார் திரும்ப பட்டறைக்கு வந்து அங்கிருந்த கணேசன், செல்வம் மற்றும் குணசீலன் ஆகியோர்களிடம் ஏன் அடித்தீர்கள் என்று நியாயம் கேட்டார் என்றும், அப்போது அவர்கள் ஒழுங்க ஓடிபோய்விடு என்று சொல்லி அய்யனாரை கீழே பிடித்து தள்ளிவிட்டார்கள் என்றும், அப்போது மட்டமல்லாக்க விழுந்த அய்யனாரை தூக்கிவிட்டு வீட்டுக்கு போடா என்று சொல்லி நானும், கண்ணனும் சொல்லி அனுப்பிவைத்தோம் என்றும் அப்போது அய்யனார் அவன் அம்மா கிட்ட சொல்லி அம்மாவை கூட்டிக்கிட்டு போலீஸை கூட்டிக்கிட்டு வர்றேன் என்று சொல்லி போனான் என்றும், செல்வமும் நான் போலீஸ் ஸ்டேசனில் சொல்லிட்டு வர்றேன் என்று சொல்லி போயிட்டார் என்றும், பின்பு அய்யனாரின் அம்மா போலீஸாரோடு பட்டறைக்கு வந்தார்கள் என்றும், அய்யனார் கணேசனை அங்கு அடித்து தள்ளிவிட்டார் என்றும், டி.கல்லுப்பட்டி எஸ்ஐ அய்யனாரை சண்டை போடவிடாமல் பிடித்துகொண்டார் என்றும், நீ புகார் கொடுத்தார் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி அய்யனாரை போலீஸ் ஸ்டேசனுக்கு போ என்று சொன்னார் என்றும், பின்னர்

அய்யனார் டி.கல்லுப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றார் என்றும் அவருக்கு பின்னாலையே அ.சா.1 மற்றும் கணேசன், செல்வம், குணசீலன் ஆகியோர்கள் சப்தம் போட்டுகொண்டே போனார்கள் என்றும், எஸ்ஐ யும் அவருடன் போலீஸ்ம் அவர்களின் பின்னாலேயே போனார்கள் என்றும், அதன்பிறகு நான் பட்டறையில் வேலை பார்த்து கொண்டிருந்த போது அய்யனாருக்கு உடல்நல குறைவு ஏற்பட்டு அவரை **அ.சா.1** அவரது தாயார், தம்பி நாகபாண்டி, நாகபாண்டி மனைவி இந்துமதி, தங்கை கிருஷ்ணவேணி ஆகியோர்கள் சேர்ந்து காவல்நிலையத்தில் இருந்த அய்யனாரை டி.கல்லுபட்டி முத்துகிருஷ்ணன் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள் என்றும், அங்கு அய்யனாரை பரிசோதித்த மருத்துவர்கள் அய்யனாரை உடனே மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகச்சொன்னார்கள் என்றும், அய்யனார் சிறிது நேரத்தில் அங்கு இறந்துவிட்டார் என்றும், அய்யனார் இறப்பு சம்மந்தமாக அய்யனார் அம்மா அ.சா.1 ரதிலட்சுமி டி.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:51:42 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**

மதுரை.